RAILS

Refugee and Immigration Legal Service

**Tamil**

# RAILS- ‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’

## படகு மூலமாக வந்து சேரும் அகதிகள் மற்றும் புகலிடம் நாடுவோருக்கான முக்கியச் செய்திகள்

<u>அறிவிப்பு</u>

படகு மூலமாக வந்து சேரும் அகதிகள் மற்றும் நிரந்தர விசாக்கள் ஆகியவற்றைப் பற்றிய அறிவிப்பு ஒன்றை 12 ஃபிப்ரவரி 2023 ஞாயிற்றுக் கிழமையன்று ‘புலப்பெயர்வு அமைச்சர்’ செய்தார்.

TPV அல்லது SHEV விசா ஒன்றை எப்போதாவது வைத்திருந்திருப்பவர்களுக்கு அந்த விசா இரத்து செய்யப்பட்டிருக்கவில்லை என்றால் இது பொருந்தும்.

14 ஃபிப்ரவரி 2023-இல் இருந்து நிரந்தர விசாவிற்காக விண்ணப்பிக்குமாறு ஒரு சிறு எண்ணிக்கையிலானவர்கள் கேட்கப்படுவார்கள். 2023 மார்ச் மாதத்தின் பிற்பகுதி வரை பெரும்பாலானவர்களால் நிரந்தர விசாவிற்காக விண்ணப்பிக்க இயலாது. ‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’ (RAILS)-யின் தகவல் அமர்வு ஒன்றிற்கு நீங்கள் செல்லாத வரை, அல்லது எமது சட்டதரணிகளில் ஒருவருடன் நீங்கள் பேசாத வரை ‘திணைக்கள’த்துடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டாம் என்று நாங்கள் வலுவாய் சிபாரிசு செய்கிறோம். தவறு ஒன்றைச் செய்வது எளிது, மற்றும் உங்களுடைய விசா விண்ணப்பத்தின் மீது இது தாக்கத்தினை ஏற்படுத்தக்கூடும்.

<u>‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’ (RAILS)-யினால் எவ்வாறு உதவ இயலும்</u>

குயீன்சுலாந்து மாநிலத்தில், அடுத்த வாரத்தில் இருந்து (20 ஃபிப்ரவரி 2023 -இல் இருந்து) RAILS சேவை (‘அகதியர் மற்றும் புலப்பெயர்வு சட்ட சேவை’) மொழி சார்ந்த உதவியுடன் தகவல் அமர்வுகளை நடாத்தும். எமது தகவல் அமர்வுகளில், இந்த அறிவிப்பு எப்படி உங்களுக்குப் பொருந்தும், RAILS சேவையினால் எவ்வாறு உங்களுக்கு உதவ இயலும்,

மற்றும் அடுத்ததாக நீங்கள் என்ன செய்யவேண்டும் என்று எமது தகவல் அமர்வுகள் நடைபெறும் பொழுது நாங்கள் உங்களுக்குச் சொல்வோம்.

இந்த வாரம் புதன் கிழமை (15 ஃபிப்ரவரி 2023)-க்குப் பிறகு https://www.rails.org.au/get-involved/events எனும் எமது வலைத்தலம் மூலமாக நீங்கள் இவற்றிற்கான முன்பதிவுகளைச் செய்துகொள்ளலாம்.

tttps:/www.rails.org.au/education/tpv-shev-coversation எனும் வலைத்தலப் பக்கத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் எமது தகவல் ஏடுகளும் இருக்கும். Subclass 851 Resolution of Status (homeaffairs.gov.au) எனும் தமது வலைத்தலப் பக்கத்தில் 'புலப்பெயர்வுத் திணைக்கள'மும் தகவல்களைக் கொண்டிருக்கும்.

உங்களுக்குத் தேவைப்பட்டால், RAILS சேவை உங்களுக்கு இலவச சட்ட உதவியை அளிக்கும். உங்களுக்கு உதவுவதற்காக சட்டதரணி ஒருவருக்கு நீங்கள் பணம் செலுத்தத் தேவையில்லை.

RAILS சேவையுடன் நீங்கள் தொடர்புகொள்ள வேண்டுமா?

இச் சமயத்தில் எங்களுக்கு பணிகள் மிகவும் அதிகமாக உள்ளன.

நீங்கள் படகு மூலமாக வந்து சேர்ந்த ஒரு அகதி அல்லது அடைக்கலம் நாடுபவர் என்றால், அத்துடன் கடந்த 6 மாதங்களில் RAILS சேவையுடன் நீங்கள் நெருக்கமாகப் பணியாற்றியிருந்தால், உங்களுடைய RAILS சேவை சட்டதரணி உங்களை அழைப்பார்.

மற்றவர்களுக்கு, பின் வருவன அவர்களுக்குப் பொருந்தினால் மட்டும் அவர்கள் எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்:

- அடுத்த மூன்று மாதங்களில் உங்களுடைய தற்சமய SHEV விசா முடிவடைகிறது என்றால்,
- வேலை செய்வதற்கான, அல்லது அன்றாட வாழ்க்கையை மேற்கொள்வதற்கான உங்களுடைய திறனில் இடையூறு ஏற்படுத்தும் உடல்சார் நோய், இயலாமை அல்லது நிலை ஒன்று உங்களுக்கு இருந்தால்,
- செயல்படுவதற்கான உங்களுடைய திறனில் இடையூறு ஏற்படுத்தும் மன நோய், இயலாமை அல்லது நிலை ஒன்று உங்களுக்கு இருந்தால்,
- நீங்கள் வீடற்றவராக அல்லது வீடற்ற நிலைக்கு ஆளாகும் ஆபத்தில் உள்ளவராக இருந்தால்,
- குடும்ப வன்முறைக்கு நீங்கள் ஆட்பட்டுக்கொண்டிருந்தால், அல்லது வன்முறைத்தனமான தொடர்புறவு ஒன்றில் இருந்து நீங்கள் சமீபத்தில் வெளியேறியிருந்தால்,
- நீங்கள் 18 வயதிற்குக் கீழ்ப்பட்டவராக, அல்லது 60 வயதிற்கு மேற்பட்டவராக இருந்தால், மற்றும் இங்கு ஆஸ்திரேலியாவில் குடும்பக் குழு ஒன்றின் அங்கமாக இல்லாதவர் என்றால்,

- நீங்கள் (அல்லது இங்கு குயீன்சுலாந்து மாநிலத்தில் இருக்கும் உங்களுடைய குடும்பத்தில் ஒருவர்) குழந்தை ஒன்றைப் பிரசவிக்கும் நிலையில் இருந்தால், அல்லது
- 17 மற்றும் 23 வயதிற்கு உட்பட்ட உங்களுடைய பிள்ளை ஒன்று வெளிநாட்டில் இருந்தால்.

மின்னஞ்சல்: pr@rails.org.au (தெரிவுசெய்யப்படுவது)
தொலைபேசி: 07 3846 9333

மேலே சொல்லப்பட்டுள்ளவற்றில் ஒன்று உங்களுக்குப் பொருந்தவில்லை என்றால், இச் சமயத்தில் தொலைபேசி மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ எம்முடன் தயவு செய்து தொடர்புகொள்ளாதீர்கள். தகவல் அமர்வுகள் ஒன்றில் கலந்துகொள்வதற்காக (மேலே சொல்லப்பட்டுள்ளவாறு) முன்பதிவு செய்துகொள்ளுங்கள். எமது தகவல் அமர்வுகளில், இந்த அறிவிப்பு எப்படி உங்களுக்குப் பொருந்துகிறது என்றும், RAILS சேவையினால் உங்களுக்கு எவ்வாறு உதவ இயலும் என்றும், அடுத்ததாக நீங்கள் என்ன செய்யவேண்டும் என்றும் நாங்கள் உங்களுக்குச் சொல்வோம்.

<u>உங்களுடைய உணர்வுகள் எப்படி இருக்கின்றன என்பதைப் பற்றி பேசவேண்டிய தேவை உங்களுக்கு இருந்தால் அதற்கான ஆதரவுதவி</u>

இந்தத் தகவல் நீண்ட காலமாக எதிர்பார்க்கப்பட்டது என்பதையும், மக்கள் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆட்பட்ட நிலையில் இருக்கின்றர் மற்றும் கவலையுடன் காத்திருக்கின்றனர் என்பது எமது புரிதல். கூடிய விரைவில் இது நடந்தேறுவது இந்த செயல்முறை செயல்முறையைப் பற்றியும், இதில் அடங்கியுள்ள விடயங்களைப் பற்றியுமான நிம்மதியையும், ஆர்வத்தையும் ஆஸ்திரேலியாவில் இருப்பதற்கான வழிப்பாதை ஒன்று உள்ளவர்களுக்கு அளிக்கும் என்பது எமது புரிதலாகும். ஆஸ்திரேலியாவில் இருப்பதற்கான வழிப்பாதை ஒன்று இன்னும் இல்லாதவர்களுக்கு இந்த அறிவிப்பானது மேலதிகத் துயரத்தை அளிக்கும் சாத்தியம் இருக்கிறது என்பது எமது புரிதல்.

QPASTT சேவையின் தற்போதைய சேவைபெறுநர்கள் அவர்களுடைய QPASTT சேவகருடன் நேரடியாகத் தொடர்பு கொள்ளுமாறு ஊக்குவிக்கப்படுகின்றனர். தடுப்பிலும், சமூகத்திலும் இருப்பவர்கள் உள்ளடங்க, வதை மற்றும் அதிர்ச்சிகளில் இருந்து பிழைத்தவர்களை, அவர்களுடைய விசா நிலை எதுவாக இருப்பினும், QPASTT சேவை தொடர்ந்து பார்த்துவரும். QPASTT சேவைகளை எவரொருவரும் நாடினால், அல்லது அவர்களது உணர்வுகளைப் பற்றி யாராவதொருவருடன் பேச விரும்பினால், பணியில் இருக்கும் அறிவுரை-ஆலோசகர் ஒருவருடன் பேச QPASTT ஆதரவுதவி இணைப்பினை திங்கள் கிழமை முதல் வெள்ளிக் கிழமை வரை காலை 9 மணியில் இருந்து மாலை 5 மணி வரைக்கும் (07) 33916677 எனும் இலக்கத்தில் அவர்கள் அழைக்கலாம்.